# திருமலைத்தீபம்

**THIRUMALAI THEEPAM**

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 17
விலை 20/=

ஆனி இதழ்-2015, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 17
E-mail- catetcota@gmail.com T.P- 026 2221022, 0263202532


## ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன் (எசாயா 61:10)

## மறைமாநில ஆயரின் செய்தி...



பிறக்கும் ஆனி மாதமானது பல முக்கிய விசுவாச வாழ்வுக்குரிய நிகழ்வுகளை தாங்கி வருவதை முதலில் நாம் நினைவிற்கொள்வோம். இம் மாதம் 07ம் திகதி கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இவ் விழாவினை பங்குகள் தோறும் விமரிசையாகக் கொண்டாடுவது மட்டுமல்ல இவற்றின் ஆழமான விசுவாசத்தின் மறைபொருளைக் கண்டறிய வேண்டும்.

எமது ஆயர்கள் மன்றம் சென்ற மாதம் கூடிய போது இம்மாத்தில் கொண்டாட உள்ள இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவன்று உலகில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடைபெறும் கொடூரக் கொலைகளும், வன்முறைகளும் ஒழிக்கப்பட வேண்டுமென்றும், அகோரப் போரிலே அனாதைகளாக்கப்பட்ட எம் உறவுகளுக்காகவும், நாம் வாழும் நாட்டிலும் வன்முறைகளும், குற்றச் செயல்களும் ஒழிக்கப்பட்டு உரிமைகளோடு அமைதியாய் வாழ கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தப் பெருவிழாவன்று விசேட செபமாகவும், தவமுயற்சிகள் மூலமாகவும் மன்றாடும்படி எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். இது அனைவருக்கும் விடுக்கப்பட்ட வேண்டுகோளாக ஏற்று செயலாக்குவோம்.

நாட்டின் அரசியலை நோக்கும் போது ஆட்சியாளர் வாக்குறுதிகளை முன் வைத்து பல எதிர்ப்புக்கள் உருவாகி உள்ளதையும் அதற்கு எந்த வகையிலும் குறைவுபடாமல் சவால்களும், முரண்பாடுகளும் தோன்றி முட்டிமோதிக் கொண்டிருப்பதையும் நாம் அறிய முடிகின்றது.

எது எப்படி என்றாலும் நல்லாட்சி மலர வேண்டும். மக்கள் ஜனநாயக ஆட்சியைக் காண வேண்டும். மக்கள் அனைவரும் சமத்துவத்துடனும் கௌரவத்துடனும் நல்லாட்சியின் பங்காளர்களாக வேண்டும்.

புதிய ஜனாதிபதியின் ஆட்சியிலே பல சிக்கல்கள் உருவாகி இருக்கின்றன. குறிப்பாக அடுத்த நாடாளுமன்றத் தேர்தல், நாடாளுமன்றக்கலைப்பு, தேர்தல் எப்போது? புதிய நாடாளுமன்றம் எப்போது? இவைகளே இப்போது பார்க்கும் செய்திகளாகவும் கேட்கும் கேள்விகளாகவும் இருக்க, வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. அதேவேளை கடந்த ஆட்சியின் போது நடத்திய ஊழல்கள், மோசடிகள் பலவும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டு பல பிரபலங்கள் சிறைப்படுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்டு வருவது வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயங்களாகும்.

மறுபுறத்திலே அல்லலுறும் மக்கள் தங்கள் உறவுகளை இழந்து தேடித்திரிபவர்கள் இடங்களை இழந்து மரங்களின் கீழ் வருடக் கணக்கில் வாழும் வாழ்க்கைகள் இப்படியான சோகங்கள்.

எனவே திருத்தந்தையின் வேண்டுதலின் பேரில் துன்புறும் மக்களுக்காக வேண்டுவோம். புலம்பெயர்ந்து நிலையற்ற வாழ்விலுள்ளோர் நிலையான வாழ்வு பெற வேண்டுவோம். வறுமைகளும், கடினங்களும் மறைந்தழிய வேண்டுவோம். எனவே மக்களின் அமைதியும், நாட்டின் சமாதானமும் அரசின் நல்லாட்சிக்கு வழிசமைக்க நல்லாசீர் கூறுகின்றேன்.

**அதி.வந்.கலாநிதி. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**
**மறைமாநில ஆயர்**
**திருகோணமலை.**

## "முப்பொன்விழா" காணும்
## மூதூர் தூய அந்தோனியார் மகா வித்தியாலயம்
## 1865 - 2015






தொடர்ச்சி 4ம் பக்கம்

## மன்னார் மறைமாவட்ட ஆயர் பூரண சுகம்பெற செபிக்கின்றோம்



மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி.வந். கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை கடந்த மாதம் திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் பூரண சுகம்பெற அவருக்கு நமது செபங்களில் மன்றாடுவோம்.

இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்ற தேசிய விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடு நிலையம் நடாத்திய **2ம் வத்திக்கான் சங்க ஒளியில் உலகிலும் திருச்சபையிலும் பொதுநிலையினரின் தலைமைத்துவம்** 2015ம் ஆண்டு நடைபெற்ற பயிற்சிகளில் இலங்கையின் திருகோணமலை மறைமாவட்டத்திலிருந்து கலந்து கொண்டோர்.

**2015. 05. 03 - 13**




திருமதி. யோகராணி லயனல் ராஜ்குமார்
பேராலயப்பங்கு
திருமதி. மேரி மெக்டலின் செபமாலை
அலஸ்தோட்டப்பங்கு
திருமதி. சுரேந்தினி மணிவண்ணன் பாலையூற்றுப்பங்கு
திரு. ஜோசப் அருள்நாயகம் ஜோசப் ஜேசுதாசன்
மூதூர்ப்பங்கு
செல்வன். சூர்யபிரபாகரன் அலக்ஸ் ஜான்சன்
தம்பலகாமப்பங்கு

**கோதுமை மணி மண்ணில் மடிந்தால் தான் மிகுந்த விளைச்சல் அளிக்கும் (தூய யோவான் 12:24-26)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

**அருட்பணி N.C அருள்வரதன்**

வருடத்தின் ஆறாவது மாதம். மீண்டும் உங்களோடு பேசுவதற்கு எனக்கொரு வாய்ப்பு மாதத்தின் தொடக்க வாரத்திலே கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவை கொண்டாடுகின்றோம்.

மேலும் 21ம் திகதி திருத்தந்தையின் விழா சிறப்பிக்கப்படுகின்றது. நமது தலைமை ஆயர் பிரான்சிஸ் அவர்களின் அன்பு, தாழ்ச்சி, அமைதி, சமாதானம், பொறுமை என்னும் குணாதிசயங்கள் கிறீஸ்தவ வாழ்விற்கு முன்னுதாரணமாகி நிற்கின்றது. தொடர்ந்தும் அவரது பணிகள் சிறப்புற வேண்டி நிற்போம்.

இன்னும் இம் மாதத்திலே தூய அந்தோனியாரின் பெயர் கொண்ட ஆலயங்கள் தங்கள் ஆலயத்தில் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். குறிப்பாக செல்வநாயகபுரம் தூய வனத்து அந்தோனியார் ஆலயம், குச்சவெளி, பேராலயம், மூதூர், ஆத்திமோட்டை, சீனன்குடா பங்குகளும், கொண்டாடுகின்றார்கள். மூதூர் தூய அந்தோனியார் மகா வித்தியாலயமும் தங்கள் பாடசாலையின் 150வது ஆண்டு விழாவினையும் கொண்டாடுகின்றார்கள். எனவே எல்லோருக்கும் எங்கள் வாழ்த்துக்கள்.

ஆட்சி முறையை நோக்கும்போது பல திடீர் திருப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசின் 19வது திருத்தம் பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்றப்பட்டிருப்பது ஆட்சியாளர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். அதேவேளை கடந்த கால ஆட்சியின் போது காணப்பட்ட மோசடிகள், ஊழல்கள், போன்றவை அலசி ஆராயப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பல பிரபலமானவர்கள் சிறைகளிலும் விளக்க மறியல்களிலும் இடப்பட்டுக் கொண்டுவருவது நீதிகள் அழியவில்லை என்பதை நினைவூட்டிக்கொண்டு இருக்கின்றன.

"அநீதியான செயல்கள்" செய்தவர் அது யாராக இருந்தாலும் அது ஒருநாள் வெளிச்சத்திற்கு வந்தே தீரும் என்பது முற்றிலும் உண்மையாகும். தவறு செய்தவர் தண்டிக்கப்படுகின்றபோது மற்றவர்களுக்கு இது ஒரு பாடமாக அமைகிறது.

பாராளுமன்றத்தைக் கலைப்பது, பொதுத் தேர்தல், மீள்குடியேற்றம், காணிகளை வழங்குதல் போன்றவைகளும் உயிரூட்டம் பெறுவதுபோல் இருக்கின்றது. நல்லவைகள் நடந்தால் நல்லதுவே. எதிலுமே பரந்த பார்வைகளும் உயர்ந்த சிந்தனைகளும் உள்வாங்கப்படுமானால் இழிந்த நிலைகள் உருவாவதற்கு இடமே இருக்காது.

எனவே நல்லவைகளைச் சிந்திப்போம், நல்லவைகளை உருவாக்குவோம், நல்லவைகள் நிலை பெற நம்மால் இயன்றவரை முயல்வோம் எனக்கூறிக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் என கூறி நிற்கின்றேன்.

# கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய அறிக்கை

இலங்கைக் கத்தோலிக்க ஆயரின் பேரவையானது உலகின் சில பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் கொடூரமாக படுகொலை செய்யப்படுவதையிட்டு ஆழமான கரிசனை கொண்டுள்ளது. இவர்கள் தங்களது செபம் மற்றும் வழிபாடுகளின் போது எவ்வாறு மிருகத்தனமாக கொலலப்பட்டுள்ளார்கள் என்பதை மிகுந்த வருத்தத்தோடு அவதானிக்கின்றோம். பல குழந்தைகள் மற்றும் மனித சமுதாயத்தின் அப்பாவிகள் இப்படிப்பட்ட சொல்ல முடியாத மிருகத்தனமான வன்செயல்களுக்கு பலியாகி வருவதை கேள்வியுற்று அதிர்ச்சியடைகின்றோம்.

அந்த வகையில் ஒருவர் தனது சமய மார்க்கத்தை பின்பற்றும் மிக முக்கிய அடிப்படை உரிமையானது மனிதாபிமானத்திற்கு முரணான செயற்பாடுகளால் மீறப்படுவதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். **உயிர் என்பது மனிதனுக்கு அளிக்கப்பட்ட இறைவனது அதி உன்னத கொடை,** எனவே ஒவ்வொருவருக்கும் தனது தெரிவிற்கு ஏற்றாற் போல சமயத்தை பின்பற்றும் சுதந்திரம் உண்டு. அத்தகைய வகையில் ஒருவரது சமய மார்க்கம் மட்டும் அவரது மரணத்திற்கு காரணமாக அமைந்துவிட முடியாது, ஏனென்றால் எவருமே கடவுளின் பெயரினால் கொலை செய்ய முடியாது.

இந்த சகோதர சகோதரிகளுடைய விசுவாசத்தின் உன்னத தியாகத்தை, அதியுயர் மதிப்பும் மரியாதையும் மிக்க ஒன்றாக நாங்கள் கருதுகின்றோம். இவ்வருந்தத்தக்க இழப்பினால் துயருறும் அனைவருடனும் நாமும் ஆழமான செபத்தில் இணைந்து கொள்வோம். இறைவன் அவர்களது குடும்பங்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் ஆறுதலும் திடமும் தேற்றுதலும் அளிப்பாராக. தமது கிறிஸ்தவ சீடத்துவத்தை வாழ, கசப்பான முடிவுகளை ஏற்று கொடூரமான துன்பங்களுக்கு மத்தியில் வாழும் எம் சகோதர சகோதரிகளை உணர்வு பூர்வமாக நினைவு கூரும்படியாக எமது விசுவாசிகளை ஆழமாகத் தூண்டுகின்றோம்.


இந்த தீவிரவாதம் மற்றும் வன்முறைகளில் யாரெல்லாம் ஈடுபட்டுள்ளனரோ அவர்களின் செயற்பாடுகள் விரைவாக நிறுத்தப்பட்டு, எஞ்சியுள்ள அப்பாவி மனிதர்கள் அதாவது குழந்தைகள் மற்றும் வளர்ந்தவர்கள் காக்கப்பட வேண்டுமென்று இடைவிடாது இறைவனிடம் இரந்து வேண்டுவோமாக.

அனைத்து மக்களும் தமது விருப்பிற்கும் சுதந்திரத்திற்கும் ஏற்ப மக்களை பின்பற்றுவதற்கான அடிப்படை உரிமை இருக்கின்றது. எனவே, உலகின் எல்லா அரச தலைவர்களையும், மற்றும் நல்மனம் கொண்ட அனைத்து ஆண்கள், பெண்களையும் அவர்களது அதிகாரத்திற்கு உட்பட்ட வன்முறைகளையும், படுகொலைகளையும் நிறுத்துவதற்குத் தேவையான தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு நாங்கள் திடமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது 07 ஆனி 2015இல் கொண்டாடப்படவிருக்கின்ற கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவை, செப தபத்தினுடைய நாளாக பிரகடனப்படுத்தி பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள இறந்தவர்களின் சகோதர சகோதரிகளுக்கு எமது உடனிருப்பைத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளது. எனவே, தமது பாவங்களுக்குப் பரிகாரமாகத் தன்னையே முழுமுதற்பலியாக சிலுவையிலே ஒப்புக் கொடுத்து தனது இறுதித் துளி இரத்தத்தையும் சிந்திய இயேசுவின் அளவில்லாத அன்பை நினைவு கூரும் இந்நாளிலே, எமது அனைத்துப் பங்குகளிலும், துறவற சபைகளிலும் ஒரு செப வழிபாட்டை ஒழுங்குபடுத்தி கடவுளின் தலையீட்டினால் இவ்வாறான மிருகத்தனமான வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என பிரார்த்திப்போமாக.

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்**
**தலைவர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
**கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்**

**மேதகு கலாநிதி வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை**
**பொதுச் செயலாளர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
***சிலாப மறைமாவட்ட ஆயர்***



# இயேசு மரியின் அன்பின் சகோதரிகள்

ஏழ்மை, தூய்மை, கீழ்படிவு எனும் புண்ணியங்களுக்கு தம்மை அர்ப்பணித்து செபம், பணி, குழுவாழ்வு என்னும் துறவற இலட்சணங்களுக்கு ஏற்ப வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இயேசு மரியின் அன்பின் சகோதரிகள்.

இச்சபையானது **கனன் யோசப் றிஸ்ட்** என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இது 1803ல் பெல்ஜியத்தில் உள்ள **லொவென்டகம்** என்னும் ஊரில் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்டது. இன்று உலகில் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா எனப் பரந்து தமது சேவையை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் இயேசுவின் திருஇருதயத்திலும் ஆழமான நம்பிக்கையைக் கொண்டு சமுதாயத்தில் துன்பப் படுபவர்கள் மத்தியில் பணி புரிவது அவர்களது பணியின் சிறப்பாகும்.

1896ல் முதன் முதலாக இலங்கையில் காலி மறை மாவட்டத்தில் பணிபுரிய பெல்ஜியத்திலிருந்து அருட்சகோதரிகள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்களின் பணியானது இன்று பரந்து விரிந்து எம் நாட்டிலும் காணப்படுகின்றது.

இன்று எம் மண்ணில் இருபத்து மூன்று இடங்களில் 147 அருட்சகோதரிகளுடன் தமது பணியை ஆற்றிவரும் இச்சபை கல்வி, மருத்துவம், வேறுபட்ட திறமைகள் கொண்ட பிள்ளைகள், வயோதிபர்களைப் பராமரித்தல், சமூகநீதி என்ற கோணங்களில் தமது சேவையைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமன்று காலத்தின் தேவைக்கேற்ப தனது பணியின் பரிமாணத்தை மாற்றிக்கொண்டு செல்வதும் இவர்களின் பணியின் மகத்துவம் என்றும் கூறலாம்.

இன்று எமது மறைமாவட்டத்திலும் தமது பணியை 1994ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நிலாவெளிப் பங்கிலிருந்து செய்து வருவது யாமறிந்ததே. தேவையில் உழல்வோருக்கு தங்களாலான சேவையைச் செய்து இயேசுவுக்கும், மரியன்னைக்கும், தங்களை அர்ப்பணித்து நிற்கின்றார்கள் இயேசு மரியின் அன்பின் சகோதரிகள். இயேசுவின் திரு இருதயத்திற்கும், மாசற்ற இருதயத்திற்கும் தங்களை ஒப்புக் கொடுத்து வாழ்வதால், இயேசுவின் திரு இருதயப் பெருவிழா அன்று தமது சபையின் விழாவாக கொண்டாடுவது சாலப் பொருத்தம் என எண்ணி அன்றைய நாளில் தங்கள் சபையின் விழாவாகவும் சிறப்பித்து வருகிறார்கள்.

ஆகவே இச்சபையினரின் பணி வாழ்வு இன்று போல் என்றும் சிறந்து உலகெங்கும் தமது பணியை ஆற்ற வாழ்த்தி நிற்கின்றோம்.

**ஆக்கம்: செல்வி. S.P.R**

## அன்னைக்கு வாழ்த்து

வெண்மதியாய் வெண்ணொலியாய்
வெள்ளிடை மலையெனவே
பாலையூற்றில் வந்துதித்த தாரகையே
விழாக் காணும் மாதம் வைகாசியன்றோ
பூ விழி மலர்ந்து
புன்னகை பூத்திட
புது மணம் வீசும் மல்லிகையாக
மக்களின் மனங்களை
கொள்ளை கொண்டே மாயமானவளன்றோ
உம்மை வாழ்க வாழ்க - என்று
வாழ்த்துக்கள் பலவும் கூறியே
வரமும் கேட்டு நிற்கின்றோம் தாயே.



-K.S-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிறந்த மண்தேடி ஏக்கம்

**அருட்பணி N.C அருள்வரதன்**

அமைதியைத்தேடி வாழ்வு
அலைந்தெங்கும் கிடையாமலே
நிலைமாறிப்போயுலகிலெங்கும்
நிலைகொண்டால் போதுமென்றே
பிறந்த மண்களை விட்டகன்று
பிறநாடு சென்ற வாழ்வுகள்
அதன் பின்னணியில் துயரங்கள்
மறையாமல் தொடருமானால்
மனங்களின் மனத்துயர்கள்
மாறுவது எப்படியோ.

மண்ணிலே வாழ்ந்திருந்த வாழ்வுகள்
மண்ணோடு மறைந்து அவை
கலைந்துவிடவே
புது மண்ணிலே புதுவடிவம்
பெற்ற வாழ்வுகள்
புது மலர்களாய்
நறுமணங்களை வீசாவிட்டால்
மனங்களுள் புதைந்துள்ள வேதனைகள்
வெளியே வந்து
புதுவடிவில் துயர்களையே
கொட்டி நிற்கும்.

மண்ணிலும் துயர்களின்னும்
மறையவில்லை
மறையாமல் நிற்பவையே
அகதி முகாம்கள்
யுத்தக் களிப்புக்கள்
யுத்தவெற்றிகளென்று
வெற்றிக் களிப்புக்கள்வேறு
கண்களை வருத்துகின்ற
கடுந்துயரக்காட்சிகளால்
நிறைந்து கிடக்கின்ற முகாம்கள்
வறுமை சிறுமை
வழியற்ற வாழ்வுகள்
மறைந்து கலைந்தவைகள்
பிறந்த மண்களிலே
புது வாழ்வாய் மலராதோ
என்பதே முகாம்களின்
பொதுவான ஏக்கங்களின்று.

## ஆசையோடு வருவேன் மறுபடியும்

உண்மை என்றால் என்ன
உலகில் தேடுகிறேன் நான்
உயர்ந்த உள்ளம் என்றால்
உறவுக்குள் தேடுகிறேன் நான்

சுயநலம் உலகில் பெரியதாகி
சுயத்தை இழந்தவர் கோடி
பணத்தை நேசிக்கும் உலகில் - நிதம்
பாசம் வேஷமாகிப் போனதுண்டு

யார் பெரியவன் யார் சிறியவன்
வேடதாரிகள் வாழும் உலகில்
கண்டதே காட்சி கொண்டதே கோலம்
கண் கண்ட உண்மையானது உலகில்

உண்மை அன்பு வாடிப்போனது
பாசத்தின் அளவு குறுகிப்போனது
கபட உள்ளம் வளர்ச்சி கண்டது
உண்மைப் பாசம் கானல் நீரானது

அன்புக்கு இத்தனை போராட்டமா - உண்மை
அன்பைக் காண இத்தனை தடங்கலா
அன்போடு வாழும் உறவைக் காண
ஆசையோடு வருவேன் மறுபிறப்பில்.

**ஆக்கம்: ஸ்ரெலா ஜெரோம்**
**சாம்பல்தீவு**

## தூய அந்தோனியார்



- போர்த்துக்கல் நாட்டின் தலைநகரமான லிஸ்பனில 1195 ஒகஸ்ட் 15ல் பிறந்தார்.
- இவரது பெற்றோர் மார்டீன், மேரி என்பவர்கள் ஆவார்.
- இவர் ஒரு செல்வந்த குடும்பத்தில் பிறந்தார்.
- இவரது திருமுழுக்கு பெயர் பெர்டினான்ட்
- இவர் தனது 15வது வயதில் புனித அகுஸ்தினார் சபையில் சேர்ந்தார்.
- பிரான்சிஸ்கன் சபையின் எளிமைக் கோலம் கண்டு பின்னர் அச்சபையில் இணைந்து கொண்டார். அங்கேயே அவர் தனது பெயரை அந்தோனியார் என மாற்றிக் கொண்டார்.
- தப்பறைக் கொள்கை வாதிகளுக்கு நல்ல விளக்கம் கொடுத்தார். பாவிகளை மனம் மாற்றினார்.
- பல புதுமைகளைச் செய்து மக்களை விசுவாசத்தில் நிலைக்கச் செய்தார்.
- 1231 ஜூன் 13ல் நோயுற்று மரியன்னையின் பாடல் பாடி மரணத்தைத் தழுவிக் கொண்டார்.
- தூய அந்தோனியாரின் அற்புதத்தை விளக்கும் வண்ணம் எமது நாட்டிலும் இவரது நம்பிக்கையை ஆழப்படுத்த பல ஆலயங்கள் இவரது பெயரில் உள்ளது மடடுமன்றி எமது மறைமாவட்டத்திலும் பல ஆலயங்கள் இவருக்காக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் பரிந்துரை என்றும் எமக்கு அருளப்படட்டும்.

## 'பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண்'

**"தீமை செய்பவருக்குத் தீமை செய்ய வேண்டாம் (மத் 5/39) என்று திருவாய் மலர்ந்தார் இயேசு.** இவ்விதமாக தூய அந்தோனியாரிடம் புதுமை பெற்ற ஒருவன், இந்தப் பொன்மொழிக்கு மாறாக நடந்து கொண்டான் அதனால் தண்டணை பெற்று தவித்தான்

நெடுநாள் நடந்து கொண்டிருந்த போர் ஒன்றில் வீரன் ஒருவன் கடுமையாகப் போரிட்டான் திடீரென யாரோ எறிந்த வேல் ஒன்றினால் அவனது கால் துண்டிக்கப்பட்டது, எறிந்தவன் சிரித்தான் அவனைப் பார்த்து "காலை விடலாமா ஆழம் தெரியாமல்" மடையா, வேலைத் தூக்கலாமா நீ என் வீரம் அறியாமல் என மனதுக்குள் எண்ணினான்.

காலை இழந்தவன் வீடு திரும்பினான். காலையும், பகலும் மருத்துவம் செய்தான். கோலை ஊன்றியாவது நடப்போம் என முயற்சி செய்தான். ஆனால் அவனது புண் இன்னும் மாறவில்லை மாறாக புரையோடிப் போயிருந்தது. மருத்துவமும் கைவிட்ட நிலையில் காயப்படுத்தியவனை நினைத்து அவனை வஞ்சித்தான் அவன் மனம் அவனை தண்டிக்கும் எண்ணத்துடன் இருந்தாலும் மனமுடைந்த அவன் வருத்தம் தாங்காமல் அந்தோனியாரின் துணையை நாடி உருக்கமுடன் வேண்டினான் **"என்மேல் இரக்கம் காட்டுங்கள்"** பட்ட காயமும் ஆறவில்லையே ஏங்கி அழுதான், அந்தோனியாரும் மனமிரங்கினார். அவனுக்கு உதவினார்.

நலமடைந்த அவன் அப்பகைவனைப் பழிக்குப்பழி வாங்க முயன்றான். **இரக்கம் பெற்ற தானும் மற்றவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும்** என்பதை மறந்தான். தனக்கு நடந்த நன்மைத் தனத்தை அவன் மறந்ததால் அந்தோனியார் அவனது காயத்தை மீண்டும் திறக்குமாறு செய்தார். பழிக்குப் பழி வாங்க நினைத்த அவன் மீண்டும் குழியான காயத்துடன் குலை நடுங்கித் தவித்தான்.

**தொகுப்பு S. P. R**

## உயிர்ப்பு விழா சிறப்பு கவிதைப் போட்டி முடிவுகள்

அருட்பணி N.C அருள்வரதன்

பங்குபற்றியவர்கள் :~ 13 பேர்
சரியான கவிதையை வடிவமைத்தவர்கள் :~ 03 பேர்

### மரணத்தை வென்றாரே கவிதையின் சரியான வடிவம்

உடலை வருத்தி உயிரைப் பறித்தே
கல்லறையிலிட்டாலும்
பெரும் கல்லறை கூடப் பெருமகனுடலை
காத்திட முடியவில்லை
அல்லல்களுற்ற அவருடலங்கே
அடங்கியே ஒடுங்காமல்
கல்லறை காத்த காவலரோடியே
வல்லமை கண்டிடவே
அவர் சொல்லியபடியே மூன்றாம் நாளிலே
வல்ல நிலைகளின் வளங்களோங்கவே
மரணத்தை வென்று விட்டாரே

உயிர்ப்பு விழா சிறப்புக் கவிதைப் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். சரியாக வடிவமைத்து பரிசுக் குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பின்வருமாறு

**பரிசுக்குரியவர்கள்**

**1ம் பரிசு 400/=**
செல்வி. ஆன் வஜீரா
21/3, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

**2ம் பரிசு 300/=**
செல்வன். தே. சபில்டன்
3ம் வட்டாரம்,
நிலாவெளி.

**3ம் பரிசு 200/=**
திருமதி. மேரி கிறிஸ்டினா எல்டன்,
இல.1, முதல் தெரு, பாரதிபுரம்,
அன்புவழிபுரம்,
திருகோணமலை.



## குட்டிக் கதை

Fr.NC

ஒரு கிராமத்துப் பாடசாலை ஒன்றிலே ஆசிரியர் ஒருவர் சிறிய வகுப்பொன்றிலே படிப்பிக்கும் போது கூறுகிறார். **"மாணவர்களே நீங்கள் பெரியவர்களைக் கண்டால் பணிந்து நடக்க வேண்டும்"** என்று.

அன்று மாலை அந்த ஆசிரியர் வீதியால் சென்று கொண்டிருக்கும் போது ஒரு சிறு பையன் குனிந்த படி தவண்டு கொண்டு வருவதைக் காண்கின்றார். அவன் வேறு யாருமல்ல அவருடைய பாடசாலை மாணவன் ஆசிரியர் மாணவனைப் பார்த்துக் கேட்டார். **"தம்பி உனக்கு என்ன நடந்தது ஏன் இப்படி நடக்கிறாய்"** என்று அதற்கு அவன் சொன்னான் "பெரியவர்களைக் கண்டால் பணிந்து நடக்க வேண்டும்" என்று நீங்கள் தானே ஐயா சொன்னீரகள் .

**எப்படி அவனது விளக்கம் பார்த்தீர்களா?**

### அறிந்து கொள்வோம்

'ஒரு இறைவாக்கினர் ஒரு மனிதனை மறைவில் அரச அபிஷேகம் செய்தார்' யார் யாரை?

விடை: சாமுவேல் - சவுல் என்பவரை

திமிங்கலத்தின் வாயில் இருந்து உயிருடன் வெளியே வந்த மனிதர் யார் அவர்?

விடை: யோனா என்னும் இறைவாக்கினர்

---

வாசகர்களே!

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :-**
**ஆசிரியர்**
**திருமலைத் தீபம்**
**297, டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவு படுத்துகின்றோம்

**கட்டணம்**

| | | |
|---|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் | - 2500.00 |
| | 1/2 பக்கம் | - 5000.00 |
| கலர் | 1/4பக்கம் | - 3750.00 |
| | 1/2 பக்கம் | - 7500.00 |

## சிந்திக்க சிரிக்க......



**மகன்:** அம்மா கோயில்ல Father நின்று கொண்டே பேசிக்கொண்டிருந்தார். ஆனால் நான் கீழே இருந்திட்டன்.

**அம்மா:** இதுதான் நீ பெரியவங்களுக்குச் செய்யும் மரியாதையா? நீ செய்த வேலை சரியில்லை. இனி இப்படிச் செய்யாதே.

**மகன்:** அம்மா நான் செய்தது சரிதான் ஏனென்டா, அவர் பிரசங்கம் வைக்கும் போது நான் இருந்து தானே கேட்க வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தித்திக்கும் திருப்பாடல் 126

அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட்

**1-3: அடிமைத்தளையிலிருந்து ஆண்டவர் விடுவித்தார்.**

1. சீயோனின் அடிமை நிலையை ஆண்டவர் மாற்றின போது, நாம் ஏதோ கனவு கண்டவர் போல இருந்தோம்.
2. அப்பொழுது, நமது முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது. நாவில் களிப்பாரவாரம் எழுந்தது; **"ஆண்டவர் அவர்களுக்கு மாபெரும் செயல் புரிந்தார்"** என்று பிற இனத்தார் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.
3. ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்; அதனால் நாம் பெரு மகிழ்ச்சியுறுகின்றோம்.

**4: ஆண்டவரே, முழு விடுதலை அளித்தருளும்.**

4. ஆண்டவரே! தென்னாட்டின் வறண்ட ஓடையை நீரோடையாக வான் மழை மாற்றுவது போல, எங்கள் அடிமை நிலையை மாற்றியருளும்.

**5-6: ஆண்டவர் விடுதலை (மகிழ்ச்சி)அளிப்பார்.**

5. கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்.
6. விதை எடுத்துச் **செல்லும்போது-செல்லும்போது** - அழுகையோடு செல்கின்றார்கள்; அரிகளைச் சுமந்து **வரும்போது - வரும்போது** - அக்களிப்போடு வருவார்கள்.

கி.மு. 587 - இல் பாபிலோனியர் எருசலேமை முற்றுகையிட்டு, அழித்து, இஸ்ரயேலரை நாடு கடத்திச் சென்றனர். கி.மு. 536 - இல் பெர்சிய அரசர் சைரஸ் பாபிலோனிய ஆதிக்கத்தை முறியடித்து, இஸ்ரயேலருக்கு விடுதலை தந்து, அவர்களைத் தங்கள் நாட்டுக்குத் திரும்ப அனுப்பினார். சுதந்திரப் பறவைகளாக நாடு திரும்பிய ஓரிருவர் தங்கள் நிலை ஒரு கனவு தானா என்று எண்ணி மகிழ்வுற்றனர். அதே வேளை நாட்டின் அழிவைக் கண்டு, துயருற்று, மக்கள் அனைவருக்கும் முழுவிடுதலை கிட்ட வேண்டுமென்று நம்பிக்கையோடு வேண்டுதல் செய்யும் வரிகளே இத்திருப்பா.

மடிந்த விதைதான் முளைக்கும் (யோவா. 12: 24 - 25); துன்புற்றோர்தான் இன்பம் அடைவர்; அழுவோர்தான் ஆறுதல் அடைவர் (மத். 5 : 3 - 10; லூக். 6 : 20 - 23); பட்டை தீட்டப்பட்ட வைரம் தான் ஒளிவீசும். எனவே, நமது துன்பங்கள் நம் இன்ப வாழ்வின் தொடக்கங்களாக இருக்கட்டும். **"நாம் அனைவரும் மாற்றுரு பெறுவோம்"** (1 கொரி. 15 : 51) என்பதை மனதிருத்தி, எம் வாழ்வில் இருக்கும் துன்பங்கள் மத்தியிலும் நம்பிக்கையோடு இருக்க இந்த திருப்பாவின் வரிகளை எமதாக்கி செபிப்போம்.

**இறைவா,**

தொட்டுவிடும் என் வாழ்வை, தூயவா
கட்டவிழ்த்து விடும் உம் அருள் ஆறுகளை;
மாற்றம் என்ற அலை என்னைத் தாக்கட்டும்.
மகிழ்ச்சிப் பூக்கள் என்னுள்ளே பூக்கட்டும்!
காத்திருப்பேன் உம் கனிவான பார்வைக்காக,
பார்த்திருப்பேன் உம் மீட்பு வரும் பாதையை,
போர்த்திவிடும் உலகை உம் அரவணைப்பால்
என்று செபிப்போம்.

**(நன்றி: ஆர். சே. இராசா. யே.ச.)**

தொடரும்...

# 'முப்பொன்விழா' காணும் மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலயம் 1865 ~ 2015

கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் பார்க்குமிடமெங்கும் கணணியின் எழிலும் வங்கக் கடலின் கடலடி தொனியும் முக்கனிகளோடு நறுசுவைத் தேனும் கொண்ட வளமிக்க அழகிய கிராமமே மூதூர் கிராமமாகும். சூழ்ந்துள்ள கடலின் மீன்பிடித் தொழிலுடன் மகாவலி கங்கையின் இயற்கை வளத்தினால் விவசாயம் செய்து தன்னிறைவு கண்டு வாழ்ந்த மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்காக 1865ம் ஆண்டிலே அருட்தந்தை மெஸ்ஸியே அடிகளார் ஆலய வீதியிலே ஆரம்பப் பாடசாலையொன்றை நிறுவினார். இது மூதூரில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட பாடசாலையாகவும், மூதூரின் இதயம் போன்று அன்று விளங்கியும் வந்தது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய வரலாற்று உண்மை. காலப்போக்கில் இடப்பற்றாக்குறை காரணமாக கத்தோலிக்க திருச்சபைக்கு சொந்தமான தற்போதைய இடத்திலே 1912ம் ஆண்டிலே அருட் தந்தை லாசரஸ் அடிகளார் இடமாற்றி நிறுவினார் என்பதும் வரலாறு கூறுகிறது. இது மிசனறிப் பாடசாலையாக இயங்கி வந்த போது அனைத்து பாடசாலைகளும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டதன் விளைவாக எமது பாடசாலையும் 1960ம் ஆண்டு காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது முன்னரும் தற்போதும் புனித அந்தோனியார் வித்தியாலயம் என்னும் பெயருடன் ஒரு கிறிஸ்தவப் பாடசாலையாக கிறீஸ்தவ அதிபர்களின் நிருவாகத்தின கீழேயே இயங்கியும் வருகின்றது.

மூதூர் பிரதேசம் என்னும்போது மூதூரின் இறங்குதுறை தொடக்கம் வெருகல் கங்கைவரை எல்லையாகக் கொண்ட பிரதேசமாகும்.
அக்காலத்தில் சம்பூர், சேனையூர், கட்டைப்பறிச்சான், ஆலங்கேணி போன்ற பிரதேச மாணவர்களுடன் மூதூர் முஸ்லீம் மாணவர்களும் இணைந்தே சமூக சமய வேறுபாடின்றி கல்வி பயின்று பலர் உயர் பதவிகளைப் பெற்ற வரலாறும் உண்டு.
அன்றைய காலகட்டத்தில் கலை, கலாச்சார விளையாட்டுப் போட்டிகளில் எமது பாடசாலையே முன்னணி வகித்தமையும் எல்லோரும் அறிவர். மேலும் எமது பாடசாலையிலேயே முதன் முதலாக பாண்டு (Band Group) வாத்தியக் குழுவை உருவாக்கி அது என்றுமே சோர்ந்து போகாமல் பல தசாப்த காலமாக இயங்கிக் கொண்டு வருவதோடு மூதூரின் பல பிரதேசத்தில் நடைபெறும் பலதரப்பட்ட நிகழ்வுகளுக்கும் இது பயன்படுத்தி வருவது பெருமைபட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறே பலருக்கும் பலவகைகளிலும் கை கொடுத்து உதவிய எமது பாடசாலையானது 150வது வருடத்தில் வெற்றி நடைபோடுவதையிட்டு மகிழ்ச்சியடையும் நாம் மேலும் இன்னும் நூற்றாண்டுகள் நிலைத்து எமது சமுதாய மாணவர்களுக்கு அறிவொளியூட்ட வேண்டும் என வாழ்த்துவதோடு இத்தனை காலமும் இப் பாடசாலையில் அதிபர்களாக, ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து தொடர்ந்தும் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு துணைநிற்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

பாடசாலையின் பணி மென்மேலும் தொடரட்டும்
**"முத்தூரின் முதற் சொத்தும் அந்தோனிச் சாலையிது முப்பொன் விழா காணும் முத்தான நேரமிது சொத்தாக நாம் மதித்து பற்றுடனே பாதுகாத்து எத்திசையும் ஒளியூட்ட என்றுமே வாழத்திடுவோம்".**

**திருமதி: சுகிர்தா ஜெகதீசன்**
**ஓய்வுபெற்ற அதிபர்**
**மூதூர் - 06**

# விவிலியமும் திருமுழுக்கு என்கிற அருளடையாளமும்



### திருமுழுக்கு யோவான் வழங்கிய திருமுழுக்கு

யூத சமயத்தை சேர்ந்தவர்கள் பல்வேறு தூய்மைச் சடங்குகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. பிறஇனத்தைச் சேர்ந்த ஒருவர் யூதமதத்தில் இணைய விரும்பினார் என்றால், அவர் "முழுக்கு" என்கிற சடங்கில் ஈடுபட வேண்டியிருந்தது புதிதாக யூதமதத்தில் இணைய வந்திருப்பவருக்கு அறிவுரைகள் வழங்கப்படுவதோடு, அவரது எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் சரியானவையா என்று பரிசோதிக்க வேண்டியிருந்தது. அதன்பின் அவர்கள் முழுக்குச் சடங்கில் கலந்து கொள்வார்கள். பொதுவாக, இச்சடங்கு பாஸ்கா விழா நாட்களில் நிகழ்த்தப்படுவதுண்டு. யூத மதத்தில் இணைய வந்திருப்போர் தங்களின் பாவங்களை அறிக்கையிட்டு ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீரில் மூழ்குவர்.

அவர்களுக்குப் புதிய பெயர் தரப்படும். சாக்கடலின் அருகேயுள்ள பாலைநிலத்தில் அமைந்திருந்த கும்ரான் என்கிற இடத்தில் நிறுவப்பட்டிருந்த ஆசிரமத்தில் துறவு வாழ்வு மேற்கொண்டிருந்த யூதமறையைத் தழுவிய எஸ்ஸேனியர்கள் என்கிற பிரிவினரிடையே முழுக்கு சடங்கு பிரபலமடைந்திருந்தது. எஸ்ஸேனியர்களின் கூட்டத்துடன் இணைந்து, துறவுவாழ்வு வாழ்ந்திட விரும்பியவர்களுக்கு மூன்றாண்டுகள் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டதோடு தொடர்ந்து அவர்கள் பரிசோதிக்கப்படுவ துண்டு அதற்குப்பிறகு அவர்கள் முழுக்குச் சடங்கிற்கு முன் அதில் ஈடுபடுவர். கடவுளைப் புகழ்ந்து பாவ அறிக்கையை வெளியிடுவர். அப்போது அங்கிருக்கும் திருக்கூட்டத்தினர் அவரை ஆசீர்வதிக்க, அவர் முழுக்கு சடங்கை நிறைவேற்றுவார். எஸ்ஸேனியர்கள் ஒவ்வோர் ஆண்டும் தங்களின் உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்துக் கொள்ளும் விதத்தில் முழுக்குச் சடங்கினை நிறைவேற்றுவர். இயேசுவின் முன்னோடியாக யோவான் திருமுழுக்கு யோவான் என்று அழைக்கப்பட காரணம், அவர் மக்களிடம் போதித்த போது, அவர்கள் மனம் மாற்றத்தின் அடையாளமாக திருமுழுக்குப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, அவர்களுக்கு யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு வழங்கினார் (மாற் 1 : 4 - 6). மக்கள் யாவரும் மீட்பரை எதிர்பார்த்து இருந்த போது (லூக் 3: 15) திருமுழுக்கு யோவான் தோன்றி மக்களிடையே போதித்து, அவர்களுக்குத் திருமுழுக்கு கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் தான் ஒருவேளை எதிர்ப்பார்க்கப்பட்ட மெசியாவக இருப்பாரோ என்றெண்ணி, மக்கள் அவரிடத்தில் கேட்டபோது (யோவா 1: 19 - 28) அவர் தான் மெசியா அல்ல என்று வெளிப்படையாகச் சொன்னார். மேலும் தான் வழங்கும் திருமுழுக்கு முழுமையான தல்ல என்பதையும் எடுத்துச் சொல்லி "நான் தண்ணீரால் உங்களுக்கு திருமுழுக்குக் கொடுக்கிறேன் ஆனால் என்னை விடவலிமை மிக்க ஒருவர் வருகிறார்....அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்" (லூக் 3 : 16) என்று மக்களிடம் கூறுவதை பார்க்கின்றோம். மேலும் புனித பவுல் தம் மூன்றாம் தூதுரைப் பயணத்தின் போது, சிறிய ஆசியாவிலுள்ள எபேசு என்கின்ற நகரத்திற்குச் சென்றிருந்த போது, அங்குள்ள மக்கள் திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கை தான் தாங்கள் பெற்றுள்ளதாக அறிவித்தனர்.

தொடரும்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவற வாழ்வின் ஸ்தாபகரான தூய வனத்து அந்தோனியார்

தொகுப்பு: ஜெயவதனி மரியதாஸ்



➤ **தபோதனர் (நூற்றாண்டு - 01, 02)**

கிறிஸ்துவோடு இணைந்து தூய வாழ்வு வாழப் போவதாக வாக்குறுதியெடுத்து, திருமண வாழ்வைத் துறந்து, செபம், தபம், நோன்பு, நற்செயல்கள் என்பவற்றில் ஈடுபட்டு, வீடுகளில் இருந்து கொண்டே வாழ்நாட்களைக் கழித்தவர்கள் **"தபோதனர்"** என அழைக்கப்பட்டனர்.

➤ **வனத்துப் பிதாக்கள் (3 ஆம் நூற்றாண்டு)**

திருச்சபை பல்வேறு பிரச்சனைகளை எதிர் கொண்ட இக்காலத்தில் ,கிறிஸ்தவர்கள் ஆன்மீக வாழ்வுக்கு முன்னுரிமை கொடுக்காது, இலௌகீகத்திற்கே முதலிடம் அளித்தனர். இச்சூழ்நிலையில் வீடுகளில் இருந்து கிறிஸ்தவ உத்தமதனத்தை பிரமாணிக்கமாக வாழ முடியாத **"தபோதனர்கள்"** தம் இருப்பிடங்களை விட்டு, எகிப்து, சிரியாபோன்ற நாடுகளின் பாலைவனங்களுக்கும், வனாந்தரங்களுக்கும் சென்று, தொடர்ந்தும் தம் செயற்பாடுகளைப் பின்பற்றி, தனிமையில் வாழ்ந்தனர். இத்தறவிகளே, **"ஏகாந்திகள்"** அல்லது **"வனத்துப்பிதாக்கள்"** என்று அழைக்கப்பட்டனர்

➤ **தூய வனத்து அந்தோனியார்**

- திருச்சபையின் பாரம்பரியத்தின்படி முதல் துறவியாகக் கருதப்படும் தூய தேப்ஸ் சின்னப்பரின் சீடரே தூயவனத்து அந்தோனியார்.
- இவரைத் துறவிகளின் பிதாப்பிதா என்றும், எகிப்திய அந்தோனியார் என்றும் அழைப்பர். இவரே துறவற வாழ்வின் ஸ்தாபகர் என்றும் கருதப்படுகின்றார். வனத்து அந்தோனியார் எகிப்தில் மெம்பிஸ் என்ற இடத்துக்கு அருகாமையில் வாழ்ந்த ஒரு செல்வந்தக் குடும்பத்தில், கி.பி 215 ஆம் ஆண்டு பிறந்தார்.
- 18 வது வயதில் தன் பக்தியுள்ள பெற்றோரை இழந்து, அநாதையானார்.
- (மத் 19:21) இல், இயேசு பணக்கார இளைஞனுக்குக் கூறிய வார்த்தைகளால் தூண்டப்பட்டு துறவறத்தால் கவரப்பட்டு தன் சொத்துக்களையெல்லாம் விற்று, வறியவர்களுக்கு அளித்து விட்டு, கி.பி 269ஆம் ஆண்டு ஒரு பாழடைந்த கல்லறைக்குச் சென்றார்.
- அங்கு அவர் கடும் தபம், செபம், வேதாகம வாசிப்பு, கைவேலைகளில் ஈடுபட்டு 15 ஆண்டுகளைச் செலவிட்டார். அங்கு அவர் பாணும், தண்ணீரும் மட்டுமே உண்டார்.
- இன்னும் அதிக தனிமையைத் தேடி, கி.பி 285 இல் டெர்எல் மெமும் என்ற இடத்துக்கு அருகாமையில் ஒரு மலைப்பாங்கான இடத்திலிருந்தே, ஒரு பாழடைந்த கோட்டைக்குச் சென்று, அங்கு 20ஆண்டுகள் இருந்தார்.
- தூய வனத்து அந்தோனியாரின் துறவற முறையால் கவரப்பட்ட பல ஏகாந்திகள் அவரிடம் ஆன்மீக ஆலோசனைகள், வழிநடத்துதல், புத்திமதிகள்பெற அவரைத் தேடிச் சென்றனர் தங்களுக்கு ஆன்ம குருவாக இருக்கும்படி வனத்து அந்தோனியாரிடம் கெஞ்சிக் கேட்டனர்.
- காலப்போக்கில் அந்தோனியாரின் குடிசையைச் சுற்றிவர சிறுசிறு குடிசைகள் குகைகள் அமைத்து அதில் வாழத் தொடங்கினர்.
- கி.பி 305இல் வனத்து அந்தோனியார் அத் துறவிகளை ஒரு சமூகமாக அமைத்து, தினமும் குறிப்பிட்ட நேரங்களில் அவர்களுக்கு ஞான வாசனை, செபம், தியானம், வேதாகமம், படிப்பு போன்ற பொது ஆன்மீக முயற்சிகளை ஒழுங்கு செய்து வழிகாட்டினார்.
- இவ்வாறாக துறவிகளின் ஆன்மீக வாழ்வை ஒழுங்கமைத்து அவர்கள் பொது வாழ்வில் வாழ, 5 வருடங்களாக உதவி செய்தார் தூய வனத்து அந்தோனியார்.
- கி.பி 313இல் இன்னும் தனிமையைத் தேடி செங்கடலுக்கும் நைல் நதிக்குமிடையே இருந்த மலைப்பக்கம் சென்று, அங்கு தன் வாழ்வில் எஞ்சிய 45 வருடங்களையும் கழித்தார்.
- அங்கு தன்னிடம் ஆன்மீக ஆலோசனை பெறத் தேடி வந்தவர்களுக்கு வேண்டிய வழிகாட்டல்களை வழங்கினார். இடையிடையே அந்தோனியார் டெர்எல் மெமுமில் தான் அமைத்த ஏகாந்திகளின் குடியேற்றத்திற்குச் சென்று உதவி செய்தார். இறுதியில் தனது 105வது வயதில் இறந்தார்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# திருகோணமலை மறைமாநிலச் செய்திகள்

## பாலையூற்று சேமக்காலையில் புதிய சிற்றாலயம் அமைக்கப்பட்டது

பாலையூற்று தூய லூர்து அன்னைத் திருத்தலத்தின் கல்லறைத் தோட்டத்தில் சிற்றாலயம் அமைக்கப்பட்டது. இந் நிகழ்வானது 25. 04. 2015 அன்று மாலை 4.30 மணிக்கு எமது மண்ணின் மைந்தர்களான அருட்பணியாளர்களான யூட் ஜோன்சன், சூ. டக்ளஸ் ஜேம்ஸ் அவர்களும் சேர்ந்து ஆலயத்தை திறந்து வைக்க பங்குத்தந்தை அருட்பணி எஸ். மதுராங்கன் குரூஸ் அவர்கள், இவர்களுடன் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினார். இதற்காக பாடுபட்டு உழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள்

**தகவல்: திருமதி அன்ரனிதாஸ் சகாயம்**

## பங்குத் தரிசிப்பு குவாடலூப்பே, பள்ளத்தோட்டம்

திருமறைக்கல்வி நடுநிலையத்தினால் கடந்த 03.05.2015 அன்று இவ்விரு ஆலயங்களிலும் பங்குத்தரிசிப்பு இடம்பெற்றது. அன்றைய தினம் மறைக்கல்வி மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் பார்வையிடப்பட்டது.

இரண்டு இடங்களிலும் மறைக்கல்வி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றது. ஆனாலும் இன்னும் திருத்த வேண்டிய விடயங்கள் காணப்பட்டது. அதனைத் தீர்க்கும் வழிவகைகளும் பங்குத்தந்தையாலும், மறைக்கல்வி நடுநிலையத்தினராலும் கலந்தாலோசிக்கப்பட்டது. இம் மறைக்கல்வித் திட்டம் என்பது குறுகிய காலதிட்டங்களில் கவனத்தைச் செலுத்தாது நீண்ட காலத்தை பயனுள்ளதாக்க செயல்பட வேண்டும் என்னும் முடிவோடு பங்குத்தரிசிப்பு இனிதே நிறைவேறிற்று.

இந்நிகழ்வு நல்லமுறையில் நடைபெறுவதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள்



## மறைமாவட்ட விவிலிய பேச்சுப் போட்டி முடிவுகள் ~ 2015

**09. 05. 2015 அன்று நடைபெற்ற மறைமாவட்ட விவிலிய பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு.**



### தமிழ் பிரிவு

**தரம் 6 ~ 9 கீழ்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்:- | செல்வன் டானியேல் டிகாஷன் | உவர்மலைப்பங்கு |
| 2ம் இடம்:- | செல்வி சிறீஸ்கந்தராஜா கம்சாளினி | இருதயபுரப் பங்கு |
| 3ம் இடம்:- | செல்வி அன்ரநைனஸ் சருணியா | அலஸ்தோட்டப் பங்கு |

**தரம் 10 ~ 11 மத்தியபிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்:- | செல்வி செல்வநேசன் செரோமிலா | அலஸ்தோட்டப் பங்கு |
| 2ம் இடம்:- | செல்வன் டெ. ச. சனோஜ் அன்ரனி | உவர்மலைப்பங்கு |
| 3ம் இடம்:- | செல்வி அ. கதரீனா மொனிகா | சீனன்குடாப் பங்கு |

**தரம் 12 ~ 13 மேல்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்:- | செல்வி இன்வன்சீனியா ஹசன் | உவர்மலைப் பங்கு |
| 2ம் இடம்:- | செல்வி ரவிச்சந்திரன் திலக்ஷிக்கா | அலஸ்தோட்டப் பங்கு |
| 3ம் இடம்:- | செல்வி பிரியங்கா தியாகராஜா | பேராலயப் பங்கு |

### ஆங்கிலப்பிரிவு

**தரம் 06 ~ 09 கீழ்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்:- | செல்வி. ஆன்சி டொனேசியா ஜோன்பிள்ளை | பேராலயப் பங்கு |
| 2ம் இடம்:- | செல்வி. டெல்மா நட்டாஷா றூவ் | பாலையூற்றுப் பங்கு |
| 3ம் இடம்:- | செல்வி. D.V. நிதமி | குச்சவெளிப் பங்கு |

**தரம் 10 ~ 11 மத்தியபிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்:- | செல்வி. இவான்ஜலின் டெஸ்மன் சதிஸ்குமார் | உவர்மலைப் பங்கு |
| 2ம் இடம்:- | செல்வன். கெனிஸ்டன் ஜேக்கப் | பேராலயப் பங்கு |
| 3ம் இடம்:- | செல்வன். மெலிந்த | குச்சவெளிப் பங்கு |

**தரம் 12 ~ 13 மேல்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்:- | செல்வி. றொபட் நிவேதிக்கா | உவர்மலைப் (இலிங்கநகர்)பங்கு |
| 2ம் இடம்:- | செல்வி. றொஷேல் தானியா டேவிட் | பேராலயப் பங்கு |

### சிங்களப்பிரிவு



**தரம் 06 ~ 09 கீழ்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்:- | செல்வி. ஹங்சி கிருனிகா | சீனன்குடாப் பங்கு |

**தரம் 10 ~ 11 மத்தியபிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்:- | செல்வி. நிபுனி தாருகா | சீனன்குடாப் பங்கு |
| 2ம் இடம்:- | செல்வி சஜினிதாரிகா | குச்சவெளிப் பங்கு |

**இப் போட்டிக்கு பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும், நன்றிகளும்.**
**இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். என்பதையும் அறியத்தருகின்றோம்.**


## பெந்தகோஸ்தே விழாவுக்கான ஆயத்த ஆராதனை வழிபாடு

பெந்தகோஸ்தே நாளை முன்னிட்டு கடந்த 08.05.2015 அன்று இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலயத்தில் சீனன்குடா பங்குத்தந்தை அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்க அவர்களது தலைமையில், எமது பங்குத்தந்தை அருட்பணி இ. யூட்சர்வானந்தன் அவர்களோடு, நற்கருணை பணியாளர் சகோதரன் இ. சார்ள்ஸ் றீகன் அவர்களும் இணைந்து மாபெரும் அபிஷேக வல்லமை பொழியும் தூய ஆவியானவரின் பெருவிழாவும், **குணமளிக்கும் ஆராதனையும்** நடைபெற்றது. படத்தில் மூவரும் இணைந்து தூய ஆவியாருக்குத் துதிபாடுவதையும் நோயாளர்களை ஆசீர்வதிப்பதையும் காணலாம்.

**தகவல்: சௌந்தரதாஸ்**
தூய யோசேப்வாஸ் மூவர் சபை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2015 ஆம் ஆண்டின் உலகத் தொடர்பாடல் தினத்தையொட்டிய பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் செய்தி



அருட்பணி. எ. றொகான் பேணாட்
இயக்குனர், சமூகத் தொடர்பு ஆணைக்குழு




சென்ற இதழின் தொடர்ச்சி..

வேறு எல்லா இடங்களிலும் பார்க்க குடும்பம் ஒன்றில்தான் எங்களதும் மற்றவர்களதும் எல்லைகள் பற்றியும், அடுத்தவரோடு அமைதியாக வாழுகின்றபோது அங்கு பின்னிப் பிணைந்துள்ள பெரியதும் சிறியதுமான பிரச்சினைகளைப் பற்றியும் நாளாந்தம் எம்மால் அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது. குறைகளற்ற குடும்பம் ஒன்று எங்கேயும் கிடையாது. முழுமையின்மை குறித்தோ, பலயீனங்கள் குறித்தோ, குழப்பங்கள் மோதல்கள் குறித்தோ நாம் அஞ்சக் கூடாது. அதைவிட, அவற்றை எவ்வாறு ஆக்கபூர்வமாக கையாள முடியும் என்பது குறித்தே கற்றுக் கொள்ள வேண்டும். எங்கள் பாவங்கள். எல்லைகளுடன் ஒருவரையொருவர் அன்பு செய்து நிற்கும் எம் குடும்பமானது, மன்னிப்பின் பாடசாலையாகவும் அமைந்து நிற்கின்றது. மன்னிப்பானது தொடர்பாடலின் ஒரு படிமுறையாகவும் அமைகின்றது. ஒரு மனம் வருந்துதல் தெரிவிக்கப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்படும்போது உடைந்துவிட்ட தொடர்பாடலானது மீளமைக்கப்படவும், கட்டியெழுப்பப்படவும் முடியுமாக இருக்கிறது. மற்றவர்களுக்குச் செவிமடுக்கவும், மரியாதையுடன் பேசவும், மற்றவர்களது கருத்துக்கு முரண்படாத வண்ணம் தனது கருத்தை வெளிக்காட்டவும் ஒரு குடும்பத்தில் கற்றுக்கொள்ளும் குழந்தையானது. சமுதாயத்தில் கலந்துரையாடலுக்கும், ஒப்புரவுக்குமான ஒரு சக்தியாக மிளிரும்.

தொடர்பாடலுக்கெதிரான சவால்கள் பற்றி வரும்போது, ஒன்றல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடு கொண்ட குழந்தைகள் குடும்பங்களில் இருக்குமாகில், எங்களுக்கு அதிகம் கற்பிக்க முடியுமாக இருக்கும். ஒரு தெறிவினை, உணர்திறன், மனோ வளர்ச்சி குறைவு போன்ற வரையறைகள் உள்ள நிலை நமக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம், ஆனாலும், அன்பு செய்யும் பெற்றோர், உடன் பிறப்புக்கள், மற்றும் நண்பர்களின் நன்றிக்குரிய செயற்பாட்டினால் எல்லோருடனும் திறந்த மனப்பான்மைக்கு அதிக உணர்திறனற்ற, பகிர்ந்து கொள்ளும், தயார் நிலைத் தொடர்பாடலாகவும் அது அமையக் கூடும். மேலும் இது பாடசாலைகள், பங்குகள், மற்றும் சபைகளை வரவேற்கும், அனைவரையும் அணைத்து நிற்கும், அமைப்புக்களாக மாற்றவும் உதவும்.

மக்களை அடிக்கடி திட்டித் தீர்க்கின்ற, கெட்ட பேச்சுக்களைப் பயன்படுத்துகின்ற, மற்றவர்கள் பற்றி மோசமாகக் கதைக்கின்ற, ஆவலாதிப் பேச்சுக்கள் மூலம் மனித சுற்றாடலின் ஒற்றுமைக்கே வேட்டு வைக்கின்ற, நஞ்சை விதைக்கின்ற உலகிலே, குடும்பங்கள் எமக்குத் தொடர்பாடல் என்பது ஒரு ஆசீர்வாதமாகும் என்பதை விளங்கிக் கொள்ள எமக்கு கற்றுத் தர முடியும். வெறுப்பு மற்றும் வன்முறைகள் ஆதிக்கம் செலுத்துவதாகத் தோன்றும் சூழ்நிலையொன்றில், குடும்பங்கள் கர்வவினால் பிரிக்கப்பட்ட சூழலில், அல்லது தப்பபிப்ராயம் மற்றும் குரோதம் என்கின்ற தகர்க்க முடியாச் சூழலில்,

**"போதுமென்றால் போதும்"** என்று கூறுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளதாகத் தென்படும்போது, சபிப்பதால் அன்றி, ஆசீர் வழங்குவதால், ஒதுக்கிவிடாமல் அன்றி சந்திப்பதால், சண்டையிடாது ஏற்றுக் கொள்வதால் எம்மால் தீங்கின் முறுக்கை உடைக்க முடிவதுடன், நன்மைத்தனம் எப்போதுமே சாத்தியமான தொன்று என்பதை எண்பிக்கவும், எங்கள் குழந்தைகளுக்கு மற்றவர்களோடு இரண்டறக் கலக்கவும் கற்பிக்கவும் முடியும். குறிப்பாக இளைய சமுதாயத்தின் அத்தியாவசிய பாகமாக மாறியுள்ள இன்றைய நவீன தொடர்புச் சாதனங்கள் தொடர்பாடலுக்கு உதவியாகவோ அல்லது தடையாகவோ குடும்பத்திலும், குடும்பங்களுக் கிடையிலும் அமைந்துவிடுவது முண்டு. தொடர்புச் சாதனங்கள் மற்றவர்களுக்குச் செவிமடுப்பதைத் தவிர்க்கின்ற வழியாக அமையும்போதும், தொடுகையை தவிர்க்கப் பண்ணும்போதும், "மௌனம் என்பது தொடர்பாடலின் பிரிக்க முடியா மூலம் என்பதையும், அது இல்லாத பட்சத்தில் செழிப்பான அர்த்தம் கொண்ட எந்த வார்த்தைகளும் இருக்க முடியாது"

(பதினாறாம் ஆசீர்வாதப்பரின் 2012ஆம் ஆண்டின் உலக தொடர்பாடல் தினச் செய்தி) என்பதை நாம் மறக்கப்பண்ணி, மௌனத்தினதும்,

ஓய்வினதும் ஒவ்வொரு கணத்தையும் நிரப்பியமையும் போதும், ஒரு தடையாக அமைகிறது, மக்கள் தமது கை தகளைப் பகிர்ந்து கொள்ளச் செய்யும்போது, தொலை தூரத்து நண்பர்களுடன் தொடர்பில் இருக்கப்பண்ணும் போது, மற்றவர்களுக்கு நன்றி கூறவோ அல்லது அவர்களின் மன்னிப்பைக் கோரவோ அல்லது புதிய சந்திப்புக்களுக்காக கதவுகளைத் திறந்துவிடவோ செய்யும்போது தொடர்புச்சாதனங்கள் தொடர்பாடலுக்கு உதவியாக அமைய முடியும். மற்றவர்களைச் சந்திப்பதில் உள்ள அதி முக்கியத்துவம் தொடர்பிலான விழிப்புணர்வில் நாம் நாளும் வளரும்போது, இந்த "புதிய சாத்தியங்கள்" என்கின்ற தொழில்நுட்பங்கள் எங்களை ஆட்கொள்ள அனுமதிப்பதிலும் பார்க்க நாம் அவற்றைப் புத்திசாலித்தனமாக பாவிக்கச் செய்கின்றோம். இங்கு கூட பிள்ளைகளைத் தம் உபகரணங்களுடன் விட்டுவிடாது பெற்றோரே பிரதம ஆசிரியர்களாக அமைகின்றனர். மனிதனின் மாண்புடன் இசைந்ததாக பொது நன்மைக்கான சேவையாகத் தொடர்புச் சாதன சுற்றாடலில் எப்படி வாழ்வது என்று தம் பிள்ளைகளுக்குச் சொல்லித்தரும் ப டி ய ா க பெற்றோருக்கு உதவுமாறு, கிறீஸ்தவ சமூகமானது அழைக்கப்படுகின்றது. இன்று நாம் எதிர் நோக்கும் பெரிய பிரச்சினை எப்படி தகவல்களை உருவாக்குவதும் பெற்றுக் கொள்வதும் என்பதல்ல, மாறாக ஒருவரோடொருவர் எவ்வாறு பேசுவது என்பதை மீளவும் கற்றுக் கொள்வதாகும். முற்கூறப்பட்ட விடயத்தில் இதனை இன்றைய எமது முக்கியமான செல்வாக்குள்ள நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் ஊக்கப்படுத்துகின்றன. தகவல்கள் முக்கியமானவை தான். ஆனாலும் அது போதாது. மிகவும் அடிக்கடி விடயங்கள் எளிமைப் படுத்தப்படுகின்றன. ஒருவரொருவர்க்கெதிராக வித்தியாசமான கோணங்கள், நோக்குகள் வீசப்படுகின்றன. ஒன்றை முழுமையாக நோக்குவதைத் தவிர்க்கப் பண்ணி மக்கள் பக்கச் சார்பு எடுக்குமாறு அழைக்கப்படுகின்றார்கள். முடிவாக குடும்பம் என்பது விவாதத்துக்குரிய கருப்பொருளோ அல்லது கற்பனை வாதத்திற்கான போர்க்களமோ அல்ல. மாறாக, தொடர்பாடல் இடம்பெறும் பின்னணியில், நெருக்கமான உறவின் அனுபவத்தில் தொடர்பாடலை நாம் கற்றுக் கொள்ளும் சுற்றாடலாக, அதாவது "தொடர்பாடும் சமூகமாக" அது அமைகின்றது. குடும்பமானது நாம் உதவி தருகின்ற, உயிரைக் கொண்டாடுகின்ற, மிகவும் பலன்தரும் ஒரு சமூகமாக இருக்கின்றது. இதனை நாம் ஒரு முறை உணர்ந்து கொள்வோமானால், நாம் மீண்டும் ஒரு முறை எப்படி குடும்பமானது ஒரு பிரச்சினை அல்லது சிக்கலுக்கானான நிறுவனத்திற்கெதிராக செழுமையான மனித மூலவளமாகத் தொடர்ந்தும் அமைகின்ற தென்பதைக் கண்டு கொள்ள முடியும். சமயங்களில் தொடர்பாடல் ச ா த ன ங் க ள ா ன வை குடும்பத்தை வாழும் நிஜம் என்றில்லாமல், ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லது ஒதுக்கிவிடப்படவோ, பாதுகாக்கப்படவோ அல்லது தாக்கப்படவோ கூடிய வடித்தெடுத்த மாதிரியாக ஒரு குடும்பத்தை முன்வைக்கின்ற போக்கினைக் கொண்டிருக்கின்றன. அல்லாது போனால், அன்பைப் பெறவும் திருப்பித்தரக் கூடுமான பின்னணியில், தொடர்பாடலின் கருத்தினை நாம் எல்லோரும் கற்றுக்கொள்ளும் இடமாக அல்ல மாறாக, கற்பனைக் கருத்தாடல்களின் களமாக எடுத்துக் காட்ட முற்படுகின்றன. எங்கள் அனுபவங்களை தொடர்பு படுத்திப் பார்க்கின்றபோது, எமது வாழ்வானது ஒரு தனி நிஜமாகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும், எங்கள் குரல்கள் பல என்பதையும், ஒ வ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது. எமது வாழ்வானது ஒரு தனி நிஜமாகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும், எங்கள் குரல்கள் பல எ ன் ப தை யு ம் , ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது. குடும்பங்கள் சமுதாயத்தின் மூல வளமாகவன்றி ஒரு பிரச்சினையாகக் நோக்கப்படக் கூடாது. குடும்பங்களானவை அவற்றின் உச்சமாக மனிதனுக்கும் பெண்ணுக்கும், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் உள்ள உறவின் அழகைப் பற்றியும், செழுமை பற்றியும் தமது சாட்சியத்தை துடிப்பாகத் தொடர்பாடல் செய்கின்றன. நாம் எமது கடந்த காலத்தைப் பாதுகாக்கவென போராடவில்லை. மாறாக, பொறுமையோடும் நம்பிக்கையோடும் நாம் வாழும் உலகிற்கு சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவே உழைத்துக் கொண்டிருக்கின்றோம்.

**வத்திக்கானிலிருந்து, 23 ஜனவரி 2015**
**பிரான்சிஸ் டி லாசால் நினைவாலயம்**
**பாப்பரசர் பிரான்சிஸ்**

## துறவற வாழ்வின் ஸ்தாபகரான தூய வனத்து அந்தோனியார்

5ம் பக்கத் தொடர்ச்சி

தூய அந்தோனியார் தேப்ஸ் சின்னப்பரால் கி.பி 250இல் எகிப்திய வனாந்திரத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஏகாந்தி வாழ்வு; துறவிகளுக்கு ஆன்மீக வழிகாட்டியாக ஆலோசகராக இருந்த தூய வனத்து அந்தோனியாரினால் கி.பி 310இல் பொது வாழ்வைக் கொண்ட ஏகாந்திகள் வாழ்வாக்கப்பட்டு புனித பக்கோமியுஸ் என்பவரால் கி.பி 318இல் துறவற குழுவாழ்வாக மாற்றப்பட்டு, இறுதியாக புனித பசில் என்பவரால் கி.பி 350இல் ஒரு சட்டக் கோவைக்கு உட்பட்ட ஒழுங்கமைப்புள்ள துறவறக் குழு பொதுவாழ்வாக மாறியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 10
## தூய யோவான் நற்செய்தி
## அதிகாரம் 09 - 13

**அன்பார்ந்த வாசகர்களே**

“விடுபட்ட எழுத்துப்புதிர்” போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும்.

1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு 200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 10. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30. 06. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | | கோ | | | | | | | |
| | க | | ந | பீ | | | | நா | |
| | | | | | | ப | | | |
| | | | | | | | | | சீ |
| | | | ஆ | | | | ம | செ | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | நா | | ம | | மா | | |
| | | அ | | | | | பா | | |
| ப | | | | | | | | | இ |

1. சீ......வா...... 2. ந......ல ஆ......ன் நா......
3. அர்......ப...... வி...... 4. ந......ம.......த் தை.......ம்
5. க.......ணீர் வி........டு 6. இ.....மி......சை 7. கோ.......மை ம.......
8. ப....ப்பை 9. பி.......வியி......யே
10. ப......தி.....லிரு......து 11. ம......நூ...... வா......கு
12. நா.....ம் செல்......ம் 13. மா......ட ம........ன்
14. பா.......வை

பெயர் ......................................................

முகவரி ......................................................

பங்கு ......................................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 08
## தூய யோவான் நற்செய்தி
## அதி 01 - 04

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | | கா | | நா | ற் | ப | த் | தா | று |
| ன் | ன் | ய் | | ம | ண் | ணு | ல | கு | |
| பு | மு | ச் | ந | த் | த | னி | யே | ல் | |
| கூ | கு | ச | | ம் | ர | நே | து | ன | எ |
| ர் | க் | ல் | மூ | கு | ன் | ளி | வு | ட | க |
| ந் | ற | | ன் | ட | பி | ள் | ளை | க | ள் |
| தா | இ | | று | ம் | | யோ | வா | ன் | |
| ர் | | | டி | ட் | கு | க் | டு | ட் | ஆ |
| | ச | மா | ரி | ய | ப் | பெ | ண் | | |
| வா | க் | கு | ம | னி | த | ர் | ஆ | னா | ர் |

1. வாக்கு மனிதர் ஆனார் 2. ஆட்டுக்குட்டி 3. நாற்பத்தறு
4. மண்ணுலகு 5. அன்பு கூர்ந்தர் 6. சமாரியப் பெண்
7. நத்தனியேல் 8. இறக்குமுன். 9. காய்ச்சல் 10. எனது நேரம் 11. மூன்று குடம் 12. கடவுளின் பிள்ளைகள்
13. யோவான்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

### பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
செல்வி. ப. மெரின்
வண்ணாங்குளம்,
முல்லைத்தீவு

விடைகள் அனுப்பியோர் - 39
சரியானவிடை எழுதியவர்கள்- 28

**2ம் பரிசு 300/=**
செல்வன். சொய்ஸ் கிளின்டன்
3ம் வட்டாரம்,
நிலாவெளி.

**3ம் பரிசு 200/=**
செல்வி. அ. கரோலினி கீர்த்திகா
57, தபால் நிலைய வீதி,
திருகோணமலை.

### பாராட்டுக்குரியவர்கள்

1. செல்வி. டொ. ரொ. பியுலா - பேராலயம்
2. செல்வி. தே. ஆன் நியோமி - பேராலயம்
3. செல்வன். மார்டின் றோய் - அன்புவழிபுரம்
4. செல்வன். இரோஸ் டிசான் - பேராலயம்
5. செல்வி. லி. சுசந்திகா - பாலையூற்று
6. செல்வி. ர.கிறேகூஷ்மா - லிங்கநகர்
7. செல்வன். தே. சமில்டன் - நிலாவெளி.
8. செல்வி. பி. டினிசியா பிரவீனா - உவர்மலை
9. செல்வன். ஆர். எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
10. செல்வி. பீ. றொக்சானி - கும்புறுபிட்டி
11. செல்வி. எல். பி. கிர்ஷாலி - பாலையூற்று
12. செல்வன். பி. ஜி. லெப்பன் - அன்புவழிபுரம்
13. செல்வி. பி. எப். கிருத்திக்கா - சாம்பல்தீவு
14. செல்வன். ச. மிதுசன் - பாலையூற்று
15. செல்வன். டி. சனோஜ் அன்ரனி - உவர்மலை
16. செல்வன். ஜே. டேமியன் - இலிங்கநகர்
17. செல்வி. ம. யுவலதா - இலிங்கநகர்
18. செல்வன். ஆர். கிருபாகரன் - பேராலயம்
19. செல்வன். ஜி. கிஷோன் - பாலையூற்று
20. செல்வி. டெ. இவாஞ்சலின் - உவர்மலை
21. திரு. பி. வி. யூட் - பேராலயம்
22. செல்வன். டே. மெருஷியான் பிள்ளை- உவர்மலை
23. செல்வன். டே. வோறன் பிள்ளை - உவர்மலை
24. செல்வி. ஆர். கேஷ்மியா - நிலாவெளி.
25. செல்வன். ம. பிரதாப் - பேராலயம்

### ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 17
### இணைச்சட்டம் 26 ~ 34
### அதிகாரங்கள்

01. கடவுளுக்கு சொந்தமான மக்கள் எவற்றை கடைபிடிப்பிடிப்பதில் கருத்தாயிருக்க வேண்டும்?

விடை.........................................................

02. ஒரேபு தவிர எந்த நாட்டில் இஸ்ராயேல் மக்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு மோசேக்கு கட்டளை யிடப்பட்டது?

விடை.........................................................

03. கடவுளின் வார்த்தை எங்குள்ளது?

விடை.........................................................

04. ..........யும், ...........யும், ...........யும், .........யும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன்.

05. யோசுவாவுக்கு பணிப்பொறுப்பு தரப்பட்ட இடம்?

விடை.........................................................

06. நூனின் மகன் யார்?

விடை.........................................................

07. மூன்றாம் ஆண்டில் செலுத்தும் காணிக்கை யாருக்கு கொடுக்கப்படும்? அவற்றில் ஒன்றை எழுதுக?

விடை.........................................................

08. “எசுரூன்” எபிரேயத்தின் பொருள் என்ன?

விடை.........................................................

09. மோசே இறந்த போது வயது எத்தனை?

விடை.........................................................

10. ஆரோன் எங்கு இறந்தான்?

பெயர் ......................................................

முகவரி ......................................................

பங்கு ......................................................

அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30. 06. 2015

### ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 15
### இணைசட்ட நூல் (01~12 அதிகாரங்கள்)
### விடைகள்

01. ஆண்டவர் (06:22)
02. தேனீக்கள் (01:44)
03. ஒரேபில் (09:08)
04. எர்மோனை (03:09)
05. வளமிகு (08:07)
06. ஏனாக்கியர் (02:10)
07. விண்ணையும், மண்ணையும் (04:26)
08. ஒரேபில் (05:02)
09. சாபம் (11:28)
10. கண்ட (12:13)

**பங்குபற்றியோர்: 18 பேர்**

**சரியான விடையளிதோர்: 11 பேர்**


**பங்குபற்றிய அனைவருக்கும் பராட்டுக்களும் நன்றிகளும்**

### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
செல்வி. அ. யூலினிஜஷ்விகா
இல: 1314 பாலையூற்று
திருகோணமலை

**2ம் பரிசு 300/=**
செல்வி. டொ. ரொ. பியுலா
இல:145/1.பற்றிமா வீதி,
திருகோணமலை

**3ம் பரிசு 200/=**
செல்வன். அ. அருள்ராஜ்
3ம் வட்டாரம்
நிலாவெளி



### பாராட்டுக்குரியவர்கள்

01. ம. யுவலதா ~ உவர்மலை (இலிங்கநகர்)
02. சு. ஸிலாஸ்மெக் ~ பாலையூற்று.
03. அ. கரோலின் கீர்த்திகா ~ பேராலயம
04. டெ. சனோஜ் அன்டனி ~ உவர்மலை
05. பீ. ஸரூபணன் ~ சாம்பல் தீவு
06. ஜே. டேமியன் ~ உவர்மலை (இலிங்கநகர்)
07. டெ. இவாஞ்சலின் ~உவர்மலை
08. ஆர். டிலுக்ஸ்ராஜ் ~ செல்வநாயகபுரம்

**குறிப்பு:** *இரண்டு போட்டிக்குரிய பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.*

## மறைக்கல்வி கற்போம் ~ 08

01. திருப்பாடல்கள் என்றால் என்ன?
**இஸ்ராயேல் மக்கள் தங்கள் வழிபாட்டிலே பயன்படுத்திய பக்தி பாடல்கள், இறை மன்றாட்டுக்கள் ஆகியவற்றின் தொகுப்பு**

02. ஞானத்தின் தொடக்கம் எது?
**ஆண்டவரில் அச்சம் கொள்ளுதல்**

03. திருச்சபை தூய ஞானப்பிரகாசியாரை யாருக்கு பாதுகாவலராக நியமித்துள்ளது?
**இளைஞருக்கும், கல்வி கற்கும் கிறீஸ்தவ மாணவ மாணவிகளுக்கும்**

04. திருத்தந்தையின் கொடியின் நிறம் என்ன?
**வெள்ளை, மஞ்சள்**

05. திருத்தந்தையின் இயற்பெயர் என்ன?
**ஜோர்ச் மரியோ பெர்கோலியோ**

06. தூய அந்தோனியாரின் திருமுழுக்கின் பெயர் என்ன?
**பெர்டினான்து பூயியோன்**

07. பெர்டினான்து (அந்தோனியார்) எந்த சபையில் சேர்ந்து எத்தனை வயதில் தனது பெயரை அந்தோனி என மாற்றிக் கொண்டார் ?
**பிரான்சிஸ்கு அசீசியார் சபையில் 26 வயதில்**

08. இயேசுவின் முன்னோடியாய் செயல்பட அருள்வரம் பெற்றிருந்தவரும் பழைய ஏற்பாட்டு இறைவாக்கினரின் வரிசையில் இறுதியானவரும் யார் ?
**திருமுழுக்கு யோவான்**

09. திருத்தந்தை பிரான்சிஸ் எத்தனையாவது திருத்தந்தை?
**266வது**

10. திருத்தந்தை பிரான்சிஸின் மரபுரிமை சின்னத்தில் உள்ள விருது வாக்கு என்ன?
**கருணை கூர்ந்து என்னை அழைத்தார்**

11. பாவம் செய்வதைவிட சாவதே மேல் என்பது எந்த தூயவரின் விருதுவாக்கு?
**தூய தோமினிக் சாவியோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்று சேமக்காலையில் புதிய சிற்றாலயம் அமைக்கப்பட்டது



## பெந்தகோஸ்தே விழாவுக்கான ஆயத்த ஆராதனை வழிபாடு



## நிலவொன்று மறைந்ததே...



அநீதிகள் அழியவில்லை
மறையவில்லை இன்னும்
தொடர்கதையாய் அவைகள்
தொடர்ந்துவரக் கொடுமைகளால்
யாழ்ப்பாணம் புங்குடுதீவிலே
கொலையுண்ட மாணவியின்
துயர்கண்ட நிலமைகளை என்ன சொல்வோம்.

கற்று வளர்ந்துயர
கால் பதித்துச் செல்கையிலே
அற்பத்தனங்கள் கொண்ட
அறிவிலிகள் சேர்ந்து ஒன்றாய்
வன்முறையைக் கட்டவிழ்த்து
வதைத்துயிரைப் பறித்தோரை
மனச்சாட்சி உள்ளவர்கள்
மன்னிக்க மாட்டார்கள்

மாணவி வித்தியாவின்
வாழ்வுக்கு நேர்ந்த நிலை
மனங்களையே வதைத்து இன்று
கோபக்கனல்களாய்ப் பொங்கியே
கோபுரங்களாக நிற்கவே
தீமைகள் செய்தோரை எப்படியும்
தீக்கிரையாய் ஆக்கினாலும் அது
பாதகமே இல்லை என்போமே

அநீதிகளின் ஆர்ப்பரிப்பால்
நிலவாக நின்ற மாணவி வித்தியா
மரணத்தால் மறைந்து விட்டாரே
மாணவி வித்தியாவின் ஆன்மா
அமைதி அடைய வேண்டுவோம்
ஈடு செய்யமுடியா இழப்பை
காணும் உறவுகள் அனைவருக்கும்
எங்கள் ஆழ்ந்த அனுதகபங்கள் சேர்வதாக

அருட்பணி: N.C. அருள்வரதன்

## பங்குத்தரிசிப்பு
### குவாடலூப்பே, பள்ளத்தோட்டம்



## மறைமாவட்ட விவிலிய பேச்சுப் போட்டி முடிவுகள் - 2015



## சிலோவாம் குளம்
### (எருசலேம்)

இயேசு பிறவிக் குருடனை சிலோவாம் (அனுப்பப்பட்டவர்) குளத்திற்குச் சென்று கண்களை கழுவச் சொன்னார். அவரும் கழுவினார். பார்வை பெற்றார். (தூய யோவான் 9:7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org